Mother Land
Play School, Day Care & After School Care
No.38, 2nd Street, Tansi Nagar, Vijayanagar, (Near ICICI Bank - Royal Shoppee) Velachery, Chennai - 600 042.
Contact
72992 62185
90947 52300

# EXPRESS VELACHERY

Neighbourhood Newspaper - Weekly
Free Circulation

நாவில் நடனமாடும் சுவைக்கு
கங்கா ஸ்வீட்ஸ்
GANGA SWEETS
PURE GHEE SWEETS
Contact
4264 5911 / 2615 4635

VOL - 3 ISSUE - 40 Editorial : 044-42077328 / 7305837388 email : expressvelachery@gmail.com

## வேளச்சேரி வாசுதேவ பெருமாள் கோவில் ஆக்கிரமிப்பு...

ஆக்கிரமிப்பில் சிக்கியுள்ள வேளச்சேரி வாசு தேவ பெருமாள் கோவில் இடத்தை, ஹிந்து சமய அறநிலையத்துறை மீட்டு எடுக்க வேண்டும் என மக்களிடையே கோரிக்கை எழுந்துள்ளது.

அடையாறு மண்டலம், 178வது வார்டு வேளச்சேரியில் வாசுதேவ பெருமாள் கோவில் உள்ளது. தொல்லியல் துறை ஆராய்ச்சியில், பதினாறாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோவில் என்று தெரிய வந்துள்ளது. முன்பு, இக்கோவில் பத்தாயிரம் சதுர அடி பரப்புக்கு மேல் இருந்துள்ளது தற்போது 2,000 சதுர அடி பரப்பில் உள்ளது. இதில், 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த அரச மரம் உள்ளது. அரசியல் கட்சியைச் சேர்ந்த சிலர், 20 ஆண்டுகளுக்கு முன்னர் மரத்தை முறித்து, சிலையை வெளியே வீசி, கட்டடத்தை இடித்து ஆக்கிரமிக்க முயன்றபோது, அங்குள்ள பெருமாள் பக்தர்கள் எதிர்த்தனர். இதனை தொடர்ந்து, அவர்கள் ஒன்று சேர்ந்து, வாசுதேவ பெருமாள் என்ற அறக்கட்டளையை துவக்கி, கோவிலை ஆக்கிரமிக்காத வகையில் பாதுகாத்து வருகின்றனர். கோவிலில் உள்ள பெருமாள் சிலைக்கு பூஜை நடத்துகின்றனர். இந்த கோவிலை, ஹிந்து சமய அறநிலையத்துறை வசம் ஒப்படைக்க முயன்றபோது, அரசியல் கட்சிகள் சேர்ந்து தடுத்துள்ளனர்.

இந்நிலையில், கடந்த மாதம் அமைச்சர் சேகர் பாபு, வாசுதேவ பெருமாள் கோவில் இடத்தை நேரில் ஆய்வு செய்தார். அப்போது சுற்றி புதராகக் கிடந்த கோவில் இடத்தை மாநகராட்சி சுத்தம் செய்தது. கோவில் இடத்தை பாதுகாக்க நடவடிக்கை



எடுக்கப்படும் என அமைச்சர் சேகர் பாபு கூறினார். இந்நிலையில், கோவில் பின் பகுதியில் கூடாரம் அமைத்து, வயதான நபரை தங்க வைத்துள்ளனர். பல ஆண்டுகளாக பயன்பாட்டில் இருப்பதாகக் கூறி, கோவில் இடத்தை ஆக்கிரமிக்க மீண்டும் முயற்சி நடக்கிறது.

இதனை அமைச்சர் தலையிட்டு கோவில் இடத்தை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என, பக்தர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது குறித்து வாசு தேவ பெருமாள் கோவில் அறக்கட்டளை நிர்வாகிகள் கூறியதாவது : அமைச்சர் ஆய்வு செய்து, ஹிந்து சமய அறநிலையத்துறை வசம் சேர்க்கப்படும் என கூறினார். அதன் பின், இடத்தை ஆக்கிரமிக்க சில கட்சியினர் தீவிரமாக இறங்கினார்கள். ஆக்கிரமிப்பு தொடர்பாக அமைச்சர் மற்றும் அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு சென்றோம். நடவடிக்கை தான் இல்லை. கோவிலை மீட்டு, ஹிந்து சமய அறநிலையத் துறையின் கீழ் உள்ள தண்டீஸ்வரம் கோவில் வசம் ஒப்படைக்க, அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பக்தர்கள் அனைவரும் கோரிக்கை விடுத்தனர்.

## Velachery residents want link road to railway station...

With the construction of the Station Service Road between Velachery and Taramani railway stations set to be completed soon, the residents of Velachery want the Greater Chennai Corporation to build a link road to it for better access.

The Southern Railway is set to open the service road once the culvert is completed near the Velachery railway station. Running parallel to the railway track, the road would provide easier access for several residential areas to the three railway stations, including Velachery, Perungudi and Taramani.

However, the absence of a wide road to link the service road with VGP Selva Nagar, Balakrishna Nagar, Annai Indira Nagar, Anna Nagar Venus Colony and Park Avenue, will pose hardship



to the residents as they would have to reach the Station Service Road via narrow streets. Social activists said the vacant and in the area belonging to the Revenue Department could be handed over to the Corporation to build a link road.

# CLASSIFIED

## SHARAN TRAVELS
All kinds of Tourist vehicle available here
**Drivers Available**
Contact V. Marimuthu
9840508030

---

INCOME TAX / GST RETURNS, ROC ANNUAL COMPLIANCE / COMPANY INCORP / PF-ESIC eTDS / TRADEMARK REGN / DSC
ASHARAJ BUSINESS CONSULTANTS
CMA.T.RAJKUMAR JAIN
99401 11431
Email:cmarajkumar@gmail.com

---

## WANTED - LADIES TAILOR
PRASUDRA Boutique
Salary Rs.15000/-
*Only Ladies*
Working time 10.00am to 5.00pm / Sunday holiday
No:2 LAKSHMI NAGAR, 2nd STREET, VELACHERY
CONTACT : PREMALATHA.G
4435504719 / 8870393999

---

## COMPUTER *SERVICES*
Laptop, Peripherals through Installation, Sales, Services, Chiplevel, Virus Removal, Networking Solutions to all Hardware & Software
*Contact*
9841823435
9841823436

---

CONSULTANT CATERING HOSPITALITY SERVICE
## NFC
NIMS FOOD CONSULTANT
E. KAMESH KUMAR IHM-MBA
Office:plot No:4,kumaran nagar, keelkattalai, chennai-600117
Adviser:K.VIJAYA KANCHANA MSC Food & Nutrition.
email:Nutritionnfc@gmail.com
Mobile:9790 902400
email:Consultantnfc@gmail.com

---

## Butter Flies
Beauty Parlour & Beauty Training Institute
(Recognised by Tamilnadu Government)
**Ladies & Kids Only**
Consultant: Beauty tip & women empowerment (adviser)
No:1, MG NAGAR, ATHANUR - 603 202
binduinno@gmail.com
80560 87391
81247 02731

---

## SERVICES
**Plumbing works**
Contact
Govindaswamy
87544 09752

---

## WOMAN'S WELLNESS YOGA CENTRE
Contact : 9444 122 922

TREATMENTS FOR
- Headache / Migraine
  தலைவலி / ஒற்றை தலைவலி
- Sinusitis
  சைனஸ் தொந்தரவு
- Neck Pain / Cervical Spondylosis
  கழுத்து வலி
- Back Pain / Lumber Spondylosis
  முதுகு வலி
- Digestion Problems & GIT disorders
  வயிறு & குடல் சம்பந்தமான தொந்தரவுகள்
- Uterine ailment like Fibroid
  கர்ப்பப்பை கோளாறுகள்
- PCOD
  மாதவிடாய் கோளாறுகள்
- Respiratory ailments, Asthama
  சுவாச கோளாறுகள்
- Diabetes & is Complications
  சர்க்கரை வியாதிகள்
- Cholastrol, BP
  கொலஸ்ட்ரால், ரத்த கொதிப்பு
- Thyroid Problems
  தைராய்டு பிரச்சனை
- Stress, Anxiety & Sleep Disturbance
  மன அழுத்தம் & தூக்கமின்மை
- Weight Loss & Weight gain
  உடல் எடையை குறைக்க & அதிகரிக்க
- General Health
  பொது மருத்துவம்
- Infertility
  குழந்தையின்மை

---

TUITION CENTRE @ Velachery
## Baby Nagar
*For Students Till 9th Grade of Any Syllabus*
*Contact*
909 494 7285

---

## RENTAL
LAND BUYING, SELLING
All Kind of Building Repair Works Undertaken
Contact B. Rajendran
90809 94500

---

## SERVICES
**Plumbing, Electrical & CCTV Camara Fixing works**
Contact P. Balaji
9677409529
9962242015

---

## LIBRARY FOR CHILDREN
*At 8/3 Vth Cross Street, 13th Main Road, Vijayanagar, Velachery, Chennai - 600 042.*
*Contact*
9171950340
8056103724

---

## Rent/lease
Hotel/Gudon Mess/Office House for Rent/Lease
*Contact*
7867982030
9600456182

---

## Commercial Space for Rent
850 Square feet for 27,000/- @ ground floor
*Diya Complex, Vijayanagar Main Road, Velachery (Near Ananda Bhavan)*
2 L as advance
CONTACT
7305837388

---

## Commercial Space for Rent
650 Square feet for 23,000/- @ first floor
*Diya Complex, Vijayanagar Main Road, Velachery (Near Ananda Bhavan)*
6 month rent as advance
CONTACT
7305837388

---

NISHA YOGA & MEDITATION CENTRE VELACHERY
## Online Class for Women and Kids
*FOR ALL AGE CATEGORIES*
*CONTACT*
89391 53560


---

## YOURS DETECTIVE AGENCY
துப்பறியும் நிறுவனம்
PRASANNA KUMARI. R
*(LADY DETECTIVE)*
HEAD OF INTELIGENTS
*No:27/D, Shivas Sundaram Flats, Nattar Street, Velachery, chennai - 42.*
*Contact*
90945 55522

---

## YOURS FAMILY SALON
*BRIDAL STUDIO*
*Sushmitha*
MAKEOVER ARTIST
*Contact*
96770 97907
98405 91115

---

98846(4)3949 98846(5)3949
## SRI KRISHNA PACKERS & MOVERS

**ALL INDIA & LOCAL**
A/C REINSTALATION, FAN, HOUSE PAINTING


LANGUAGES TALK : TAMIL, MALAYALAM, ENGLISH, HINDI
MADIPAKKAM, CHENNAI - 600091. FOR HIRE
வாடகை

---

## WANTED
*Tele Callers*
CONTACT
7305837388

---

## DESIGNING
Tamil & English DTP designing works
Rs. 750/- only
*Contact*
7305837388

---

To Advertise about Your Business Rental House, Buying, Selling, Services & Job Vacancy Pay Rs. 100/- Only

# Tamil Nadu wants Pallikaranai declared Ramsar site...



**CHENNAI:** The Union government told Parliament that it had received a proposal from Tamil Nadu to declare Pallikaranai marshland in Chennai a 'Ramsar site' – a wetland of international significance.

The state had recently launched a wetland mission to identify and map 100 wetlands in five years and restore ecological balance with a focus on livelihood options.

The Tamil Nadu Wetland Authority had sent the Pallikaranai proposal to the Centre on November 20. "The same has been submitted for approval by a competent authority," Union minister of state for environment, forest and climate Ashwini Kumar Choubey told Lok Sabha to a query from DMK leader T R Baalu.

The Ramsar Secretariat in Switzerland declares wetlands as Ramsar sites after assessing proposals from the country's designated administrative authority. The state government has advised the Chennai Corporation to relocate existing dump yards, Alandur and Perungudi. It also issued instructions to collectors of Chennai and Chengalpet to survey encroachments and unauthorised settlements in the marsh.

The Madras high court had recently ordered effective steps to declare the marsh as a Ramsar site.

"We are taking steps to declare it as a Ramsar site and as a bird sanctuary. We have already sent a proposal to the Centre for eco-restoration of Pallikaranai under Green Climate Fund, which includes entire eco-restoration, removal of invasive species, making it bird-friendly and planting trees and saplings that are suitable to the marsh," Environment and forests secretary Supriya Sahu told TOI. A wetland has to meet at least one of the nine criteria to be declared as Ramsar site, while Pallikaranai fulfills seven of them.

The commissioner of land administration and GCC have been told to identify and cancel all illegal pattas in the area. The municipal administration and water supply department has been advised to arrest the disposal of municipal solid waste, sewage and effluents into the marsh.


# யோகாசனம்

## புஜங்காசனம்



பயன்கள்:

- மார்பு எலும்பு விரியும்.
- பிராண சக்தி உடம்பில் அதிகம் சேரும்.
- இடுப்புப் பகுதி சுருங்கும்.
- ஜீரணக் கோளாறு ஏற்படாது.
- பெண்களுக்கு மாதவிடாய்க் கோளாறுகள் நீங்கும்.
- அடிவயிற்றுப் பிரச்சனைகள் தீரும்.



அருட்பெருஞ்ஜோதி தனிபெருங்கருணை

YOGA CENTRE

Cell : 9444 122 922




CORONA VIRUS PREVENTION TIPS




### ஆன்மீக தகவல்

## கார்த்திகை மாதத்தில் நலம் தரும் விரதங்கள்

**கேதார கௌரி விரதம்:-** கார்த்திகை பவுர்ணமி அன்று அம்மனை மற்றும் அப்பனை நினைத்து விரதமுறை மேற்கொள்ளும் இவ்விரத முறை உமாகமேஸ்வர விரதம் என்று அழைக்கப்படுகிறது

**கார்த்திகை ஞாயிறு விரதம்:-** இவ்விரத முறை கார்த்திகை முதல் ஞாயிறு அன்று தொடங்கப்பட்டு தொடர்ந்து பன்னிரெண்டு வாரங்கள் கடைப்பிடிக்கப்படுகிறது. நவகிரகங்கள் இவ்விரதத்தை மேற்கொண்டே வரம் பெற்றனர். எனவே இவ்விரதமுறையை கடைப்பிடிப்பதால் நவகிரகப் பாதிப்புகள் நீங்கி அம்மனின், அப்பரின் பேரருள் கிடைக்கும்.

**கார்த்திகை விரதம்:-** கார்த்திகை விரதம் என்பது முருகப்பெருமானைக் குறித்து கார்த்திகை மாத கார்த்திகை நட்சத்திரம் தொடங்கி ஒவ்வொரு மாதமும் கார்த்திகை நட்சத்திரத்திலும் கடைப்பிடிக்கப்படுகிறது. இவ்விரத முறையை மேற்கொள்வதால் வாழ்வின் பதினாறு செல்வங்கள் கிடைக்கும். தொடர்ந்து 12 ஆண்டுகள் இவ்விரத முறையை பின்பற்றுவதால் வாழ்வில் பெரும்பேறும், முக்தியும் கிடைக்கும்.

**விநாயகர் சஷ்டி விரதம்:-** இவ்விரதமுறை விநாயகப் பெருமானை நினைத்து மேற்கொள்ளப்படுகிறது. இவ்விரதம் கார்த்திகை மாதம் தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாதம் வளர்பிறை சஷ்டி வரை மொத்தம் 21 நாட்கள் கடைப் பிடிக்கப்படுகிறது. இவ்விரத முறையினை மேற்கொள்வதால் சிறந்த வாழ்க்கைத் துணை, புத்திசாலியான புத்திரர்கள் கிடைப்பர். வாழ்வின் எல்லாப் பேறுகளும் கிடைக்கும். எடுத்த நல்ல காரியங்கள் வெற்றியாகும்.

**ப்ரமோதினி ஏகாதசி:-** கார்த்திகை மாத வளர்பிறை ஏகாதசி ப்ரமோதினி என வழங்கப்படுகிறது. இது கைசிக ஏகாதசி என்றும் அழைக்கப்படுகிறது. இவ்விரத முறையைப் பின்பற்றுவதால் உயர்ந்த நன்மைகள் கிடைக்கும். பூலோகத்தில் சொர்க்க வாழ்வு கிடைக்கும்.

# இந்த வார ராசிபலன்



**மேஷம்**

இந்த வாரம் உங்களுக்கு மிக சிறப்பாக இருக்கும். ஏனென்றால், நீங்கள் முந்தைய கடின உழைப்பின் மூலம் பல வாய்ப்புகளையும் வெற்றிகளையும் பெறுவீர்கள்.



**ரிஷபம்**

இந்த வாரம் வீட்டில் சுபகாரியங்கள் நடக்க வாய்ப்புள்ளது. ஏனென்றால், இந்த நேரத்தில் பல கிரகங்களின் பார்வை, உங்கள் குடும்பத்தை வந்து சேரும்.



**மிதுனம்**

இந்த வாரம், உங்கள் வீட்டிற்கு விருந்தினர் வருவது உங்கள் நிதி நிலைமையை ஓரளவு சேதப்படுத்தும். அவர்களின் விருந்தோம்பலுக்கு அதிக பணம் செலவிடுவீர்கள்.



**கடகம்**

இந்த வாரம் நீங்கள் ஆற்றல் பற்றாக் குறையைக் காண்பீர்கள், எனவே நீங்கள் ஆர்வத்துடன் எந்த வேலையும் செய்ய மாட்டீர்கள். இதன் விளைவு உங்கள் வேலையை பாதிக்கும்.



**சிம்மம்**

இந்த வாரம், குடும்பத்தில் நடக்கும் எந்தவொரு பிரச்சினையும் உங்கள் வாழ்க்கையை சீர்குலைக்கும். எனவே எல்லா விஷயத்திலும் மிக கவனமாக செயல்பட வேண்டும்.



**கன்னி**

இந்த வாரம் உங்கள் மனதில் தேவையற்ற மன குழப்பங்கள் வரும். இதனால் வாழ்க்கையில் முன்னேற எந்த திட்டத்தையும் சிந்திக்க நீங்கள் தவறிவிடுவீர்கள்.



**துலாம்**

இந்த வாரம் உங்களுக்கு பல உடல்நலப் பிரச்சினைகள் வந்து சிக்கல்களை ஏற்படுத்தும். எனவே நீங்கள் உங்கள் ஆரோக்கியத்தில் சிறிது கவனம் செலுத்த வேண்டும்.



**விருச்சிகம்**

இந்த வாரம் உங்கள் பணிச்சுமையில் சிறிது கவனம் வேண்டும். இதனால் நீங்கள் தேவையில்லாமல் நிறைய நேரத்தை வீணடிப்பீர்கள். இது உங்கள் வருமானத்தை பாதிக்கும்.



**தனுசு**

இந்த வாரம் முதலீடு செய்வது பற்றி யோசித்துக் கொண்டே இருப்பீர்கள். ஆனால் எந்த சட்ட விரோதமான முதலீடும் செய்ய வேண்டாம் இதனால் உங்களுக்கு பிரச்சனைகள் வரும்.



**மகரம்**

இந்த வாரம் நீங்கள் உங்கள் வேலையில் கடினமாக உழைத்தால் உங்களுக்கு வெற்றி கிடைக்க வாய்ப்புள்ளது. எனவே தொடக்கத்திலிருந்தே கடின உழைப்பிற்கு தயாராக இருங்கள்.



**கும்பம்**

இந்த வாரம், உங்களுக்கு கூடுதல் வேலை சுமையால் ஆரோக்கியம் சீர் குலையும். இது போன்ற சூழ்நிலையில், உங்கள் உடலுக்கு சிறிது ஓய்வு கொடுப்பது நல்லது.



**மீனம்**

இந்த வாரம் பணித்துறையில் அதிக வேலை இருந்தாலும் நீங்கள் மிகவும் உற்சாகமாக இருப்பீர்கள். அதனால் உங்களால் குறிப்பிட்ட நேரத்தில் வேலையை முடிக்க இயலாது.


# Chutties Corner

## HAPPY BIRTHDAY



S. Shree Preethika
December - 13

## PAPER CRAFT




## திருக்குறள்

28. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

The might of men whose word is never vain,
The 'secret word' shall to the earth proclaim

படத்தில் உள்ள 6 வித்தியசங்களை கண்டுபிடியுங்கள்...!



Find 6 Differences ?

## தனித்திறமை பகுதி





Yeddanapudi Jeyan
IV- Std
Hyderabad

உங்கள் வீட்டு குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்த, அவர்களின் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை அவர்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெயில் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.

## பழமொழி (Proverb)

Which country is equal to our motherland.

சொந்த நாட்டிற்கு எந்த நாடு ஈடாகும்.


## வண்ணக்கோலம்





Vijaya Asupathi
Thirupur

## மெகந்தி டிசைன்



## Word - O - Mania

- **Babble** (verb): talk rapidly and continuously in a foolish, excited, or incomprehensible way; jabber
  The children babbled excitedly among themselves.
- **Benevolent** (adjective): kind, helpful and generous
  Mr. Murthy is a benevolent man.
- **Bereave** (verb): be deprived of a close relation or friend through their death.
  She expressed her sympathy to the bereaved family.

*By*
*Dr. Mrs. Y. Deepika, M.Sc, Ph.D,*
*Hyderabad.*



# வீட்டின் ஜன்னல் ஓரம் தூங்கும் பெண்களை குறிவைத்து: வேளச்சேரி பகுதியில் சங்கிலி பறித்த ஆந்திர கொள்ளையன் கைது...

வேளச்சேரி பகுதிகளில் உள்ள வீடுகளில் ஜன்னலோரம் காற்றுக்காக படுத்திருந்த பெண்களின் கழுத்தில் இருந்து தங்க சங்கிலி பறிப்பு சம்பவங்கள் நடைபெறுவதாக வேளச்சேரி போலீசாருக்கு புகார்கள் வந்தன. இதையடுத்து வேளச்சேரி போலீசார் வழக்குப்பதிவு செய்து அப்பகுதியில் தீவிரமாக ரோந்து பணியில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த கொள்ளையனை பிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டது. இந்த தனிப்படையினர் நடத்திய விசாரணையில், அடிக்கடி வீட்டின் ஜன்னல் ஓரம் படுத்திருக்கும் பெண்களிடம் சங்கிலி பறித்து தப்பிச் சென்ற கொள்ளையன் ஆந்திராவில் பதுங்கி இருப்பதாக போலீசாருக்கு தெரிய வந்தது.

இதையடுத்து தனிப்படையினர் ஆந்திரா சென்றனர். அங்கு பதுங்கி இருந்த சம்பவத்தில் ஈடுபட்ட ஆந்திரா மாநிலம் நகரி பகுதியை சேர்ந்த திருலோகசந்தர் (வயது 56) என்பவரை பிடித்து கைது செய்து விசாரித்தனர். அவரிடம் நடத்திய விசாரணையின் போது ஆந்திராவில் இருந்து சென்னைக்கு பகலில் வந்து நள்ளிரவில் ஜன்னல் ஓரம் தூங்குவோரை நோட்டமிட்டு கழுத்தில் அணிந்திருக்கும் தங்கச் சங்கிலியை பறித்து கொண்டு ஆந்திராவில் உள்ள அடகு கடையில் விற்று பணம் வாங்கியது தெரியவந்தது.

சென்னயையிலுள்ள ஆதம்பாக்கம், பள்ளிகரணை, மடிப்பாக்கம், வேளச்சேரி ஆகிய காவல் நிலையங்களில் இவர் மீது 20-க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளது குறிப்பிடத்-தக்கது.

இதனையடுத்து திருட்டு நகைகளை வாங்கியதாக ஆந்திரா மாநிலம் நகரியில் உள்ள அடகு கடை உரிமையாளர் உகமாராம் (வயது 56) என்பவரையும் போலீசார் கைது செய்தனர். இவரிடம் இருந்து பதினைந்து பவுன் தங்க நகையை பறிமுதல் செய்தனர். பின்னர் கைது செய்யப்பட்ட இரண்டு பேரையும் சென்னை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்கப்பட்டனர்.

## சளி, இருமல் பிரச்சினை போக்கும் அருமருந்து



❖ நெல்லிக்காய் சாறில் மிளகு தூள் மற்றும் தேன் இரண்டையும் கலந்து குடித்து வந்தால் சளி மூக்கடைப்பு நீங்கும்.

❖ புதினா இலை மிளகு இரண்டையும் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் சளி, இருமல் நுரையீரல் கோளாறுகள் நீங்கும்.

❖ எலுமிச்சை சாறை சுடுநீரில் விட்டு நன்கு கலக்கி பின் தேன் சிறிது சேர்த்து கலந்துக் குடித்தால் நெஞ்சு சளி கரையும்.

❖ கருமிளகு டீ குடிப்பது தொண்டை வலியைக் குறைக்கும். ஒரு கப் வெந்நீரில் இரண்டு ஸ்பூன் தேன், சிறிதளவு கருமிளகு சேர்த்து மூடிவைக்கவும். இதனை 15 நிமிடங்களுக்குப் பிறகு குடிக்கவும். கருமிளகு இருமல், சளிக்கு மிகவும் நல்ல மருந்து.

# மடிப்பாக்கம் சந்திப்பில் போக்குவரத்து சீரமைப்பு...



சென்னை மாநகராட்சியின் பெருங்குடி மண்டலம், மடிப்பாக்கத்தில் பஜார் சாலை, சபரிசாலை, கார்த்திகேயபுரம் சாலை, பொன்னியம்மன் கோவில் சாலை ஆகியவை இணைக்கும் நான்கு முனை சந்திப்பு பிரதானமானது. நான்கு சாலையிலும் மாநகர பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

இந்த சந்திப்பை சுற்றி, 10க்கும் மேற்பட்ட அரசு, தனியார் பள்ளிகள் உள்ளன. குறிப்பிட்ட சந்திப்பில் தினமும் ஆயிரக்-கணக்கான இரு சக்கர வாகனங்கள், மற்றும் நான்கு சக்கர வாகனங்கள், மாநகர பேருந்துகள் கடந்து செல்கின்றன. பள்ளி நாட்களில், காலை, மாலை வேளைகளில் கடும் போக்குவரத்து நெரிசலும், விபத்துக்களும் நடக்கின்றன. இதற்கு நிரந்தர தீர்வாக குறிப்பிட்ட சந்திப்பில் சிக்னல் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

இதன் நடவடிக்கையாக, மடிப்பாக்கம் போக்குவரத்து பிரிவு இன்ஸ்பெக்டர் ஹரிதாஸ், சம்பந்தப்பட்ட சந்திப்பில் சிக்னல் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆய்வு செய்தார். இதனைத் தொடர்ந்து, காலை மற்றும் மாலை என இரு வேளையிலும் போக்குவரத்தை சீர்படுத்த போலீசார் பணி அமர்த்தப்பட்டுள்ளனர்.

போலீசாரின் இந்த நடவடிக்கை, அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது.







தெரிந்துக்கொள்வோம்!

## தீராத நோய் தீர்க்கும்... சிரஞ்சீவி மந்திரம்...



ஓம் ஸ்ரீ ஆஞ்சநேயாய நமஹ...
ஓம் ஸ்ரீ பரசுராமாய நமஹ...
ஓம் ஸ்ரீ மார்க்கண்டேயா நமஹ...
ஓம் ஸ்ரீ மகாபலி சக்கரவர்த்தி நமஹ...
ஓம் ஸ்ரீ வேதவியாசாய நமஹ...
ஓம் ஸ்ரீ அஸ்வத்தாமா நமஹ...
ஓம் ஸ்ரீ விபீஷணாய நமஹ...

வலது கையில் ஒரு செப்புப் பாத்திரத்தில் தண்ணீர் வைத்து ஒன்றிரண்டு அருகம்புல் போட்டு, வடக்கு நோக்கி அமர்ந்தோ, நின்றோ சிரஞ்சீவிகளான இந்த ஏழுவரின் நாமங்களையும் 21 தடவை ஜெபித்து, பின்னர் அந்த நீரை அருந்தி வர தீரா நோய்கள் தீருவதுடன் அகால மரணம் ஏற்படாமல் காக்கும்.

உடல்நிலை சரியில்லதாவர்கள் காலை எழுந்த உடனும் உறங்கும் முன்னரும் மூன்று முறையாவது ஜபித்து வர மேற்கண்ட பலனில் பாதி கிட்டும்.



# 70,000 ஆண்டுகளுக்குப் பிறகு பூமிக்கு மிக அருகில் வரவிருக்கும் வால் நட்சத்திரம்...

டிசம்பர் மாதம் பொதுவாகவே வானியல் நிகழ்வுகள் அதிகம் நடைபெறும் மாதமாகத் திகழ்கிறது. கடந்த டிசம்பர் 4-ம் தேதி கங்கண சூரிய கிரகணம் நிகழ்ந்தது. இப்படியான சூரிய கிரகணம் நடைபெறும் நேரத்தில் நிலவு அதனை மறைத்திருப்பதால் அது ஒரு நெருப்பு வளையம் போலக் காட்சியளிக்குமாம். ஆனால், அன்டார்டிகாவில் இருந்திருந்தால் மட்டுமே இந்த சூரிய கிரகணத்தை முழுமையாகக் கண்டு களித்திருக்க முடியும். மற்ற இடங்களில் இருப்பவர்களுக்குப் பகுதியாக இந்த சூரிய கிரகணம் தெரிந்து இருக்கும் எனத் தெரிவித்திருந்தது நாசா. அந்த வானியல் நிகழ்வைத் தொடர்ந்து மற்றொரு வானியல் நிகழ்வும் இந்த மாதம் நிகழவிருக்கிறது. நம் பூமிக்கு மிக அருகில் ஒரு வெளிச்சமான விருந்தினர் ஒருவர் வரப்போகிறார்.

அவர் வேறு யாரும் இல்லை C/2021 A1 என அழைக்கப்படும் "லியனார்டு" (Leonard) வால் நட்சத்திரம் (Comet) தான். இந்த ஆண்டின் மிகவும் வெளிச்சமான வால் நட்சத்திரம் என்று அழைக்கப்படும் இந்த லியோனார்டு எனும் வால் நட்சத்திரம் பூமிக்கு மிக அருகில் வரப்போகிறது. இந்த வால்



நட்சத்திரமானது இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஜனவரி 3-ம் தேதி அமெரிக்காவில் உள்ள மவுன்ட் லெம்மான் அப்சர்வேட்டரியில் கிரிகோரி ஜெ.லியோனார்டு (Gregory J.Leonard) என்பவரால் கண்டறியப்பட்டது. 70,000 ஆண்டுகளுக்குப் பிறகு பூமிக்கு மிக அருகில் வரவிருக்கிறது இந்த வால் நட்சத்திரம்.

இந்த வால் நட்சத்திரத்தின் பெயரில் ஒரு ட்விட்டர் கணக்கும் திறந்திருக்கிறார்கள். அந்த வால் நட்சத்திரமானது எந்த இடத்தில் இருக்கிறது எப்போது நம் கண்களுக்குத் தெரிய வாய்ப்பு இருக்கிறது என்பதனை பதிவு செய்கிறார்கள். டிசம்பர் 10-ஆம் தேதி முதல் டிசம்பர் 16-ஆம் தேதி வரை இந்த வால் நட்சத்திரம் வானில் தென்பட வாய்ப்புள்ளது. சூரியனை நோக்கிய தன்னுடைய பயணத்தில் லியோனார்ட் பூமியை கடக்க உள்ளது. டிசம்பர் 12-ஆம் தேதி வரை இந்த வால் நட்சத்திரம் அதிகாலையில் தெரியும்.

சூரியன் உதிப்பதற்கு 90 நிமிடங்கள் முன்பாக வானத்தின் கிழக்குப் பகுதியில் இந்த வால் நட்சத்திரம் தென்படும். டிசம்பர் 12 -ஆம் தேதி தான் இது பூமிக்கு மிக மிக அருகில் வரும் நாள். அன்றைக்கு நம் கண்களுக்கு தென்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். டிசம்பர் 14-ஆம் தேதிக்கு மேல் மாலையில் இந்த வால் நட்சத்திரம் வானில் தென்படலாம். இந்த வால் நட்சத்திரம் மிக வெளிச்சமானது என்பதால் உலகின் பல இடங்களில் இதை வெறும் கண்களாலே காணும் வாய்ப்புகள் கூட கிடைக்கலாம் என நாசா கூறியுள்ளது. ஜனவரி மாதத் தொடக்கத்தில் இந்த வால் நட்சத்திரம் சூரியனுக்கு மிக அருகில் சென்று விடுமாம்.

# சைக்கிள் ரோந்து: போலீசார் அதிரடி...

சென்னையில், குற்ற சம்பவங்களை தடுக்க மற்றும் குற்றவாளிகளை பிடிக்க, போலீசார் சைக்கிளில் ரோந்து செல்லும் திட்டம் மீண்டும் துவங்கப்பட்டது. போலீசார் ரோந்து பணிக்கு சைக்கிளில் செல்வது, 20 ஆண்டுகளுக்கு முன் அமலில் இருந்தது.

லத்தி, டார்ச் லைட், விசில் ஆகியவற்றுடன் வலம் வந்தாலே, குற்றவாளிகள் கதி கலங்குவர். பின், நடந்து சென்றும் ரோந்து பணி செய்தனர். இதனால், போலீசாரின் உடலும் கட்டுக்கோப்பாக இருந்தது. நீண்ட இடைவேளைக்கு பின், சென்னையில் சைக்கிளில் ரோந்து செல்லும் பணி, 2016ஆம் ஆண்டு ஜூன் மாதம் துவங்கப்பட்டது.

சென்னை மாநகர போலீசாருக்கு, 250 ரோந்து சைக்கிள்கள் வழங்கப் -பட்டன. ஓரிரு நாள் போலீசார் தெருக்களில் வலம் வந்தனர். அதன் பின், சைக்கிள் காவல் நிலையத்தில் துாங்கியது. அதே வேளையில், பரங்கிமலை காவல் மாவட்டத்தில், 53 வயதான சரவணன் என்ற காவலர், 25 ஆண்டுகளாக சைக்கிளில் ரோந்து பணி செய்து வருகிறார்.

தினமும் 20 முதல் 60 கி.மீ., வரை சைக்கிளில் சென்று பணி செய்கிறார்.



இந்நிலையில், சென்னையில் குற்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க, முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க, மீண்டும் போலீசார் சைக்கிளில் ரோந்து செல்ல, சென்னை மாநகர போலீஸ் கமிஷனர் சங்கர் ஜிவால் அறிவுறுத்தி உள்ளார். ஒவ்வொரு காவல் நிலையத்திலும், ரோந்து பிரிவை பொறுத்து, நான்கு போலீசார் வரை சைக்கிளில் ரோந்து பணி மேற்கொள்ள வலியுறுத்தப்பட்டுள்ளது. 9ஆம் தேதி வியாழன் கிழமை முதல் போலீசார் சைக்கிளில் ரோந்து பணியை துவங்கினர்.

காவல் நிலையத்தில் சைக்கிள் இல்லாததால், போலீசார் வீட்டில் சொந்தமாக வைத்திருந்த சைக்கிள் மற்றும் வாடகை சைக்கிளிலும் ரோந்து பணிகளை மேற்கொண்டனர்.

## சென்னையில் தங்கம் மற்றும் வெள்ளி விலை நிலவரம்

| | | |
|---|---|---|
| தங்கம் விலை - | 22 கேரட் | 24 கேரட் |
| | 1 கிராம் ₹ 4,516 | 1 கிராம் ₹ 4,906 |
| | 8 கிராம் ₹ 36,128 | 8 கிராம் ₹ 39,248 |
| வெள்ளி விலை - | 1 கிராம் ₹ 65.30 | |
| | 1 கிலோ ₹ 65,300 | |

# 50,000 ex-gratia for kin of persons who died of COVID: TN Govt...

The Tamil Nadu government has ordered an ex-gratia of 50,000 from the State Disaster Response Fund for the kin of persons who have died of COVID-19 including those involved in relief operations or associated in preparedness activities.

The cause of death has to be certified as COVID-19 as per guidelines jointly issued by the Ministry of Health and Family Welfare and Indian Council of Medical Research on September 3, 2021

Expenditure on this item will be incurred from State Disaster Response Fund only, in strict compliance with the National Disaster Management Authority guidelines dated September 11, a Government Order said.

This ex-gratia assistance will be applicable from the date of first COVID-19 case reported in the country and will continue till denotification of




COVID-19 as a disaster or till further orders.


This excludes those who have been given ex-gratia of 25 lakh for front line workers, 5 lakh for children who have lost both parents and 3 lakh for children who lost one parent.

## சென்னையில் பெட்ரோல், டீசல் விலை நிலவரம்





| பெட்ரோல் விலை | டீசல் விலை |
|---|---|
| விலை 1 லிட்டர் | விலை 1 லிட்டர் |
| ₹ 101.52 | ₹ 91.54 |



**ராஜா ஜேசுதாஸ் செல்லையா (Raja Jesudoss Chelliah) பிறந்த தினம் இன்று டிசம்பர் -12, 1922**

ராஜா செல்லையா எனப் பரவலாக அறியப்படும் ராஜா ஜேசுதாஸ் செல்லையா 12 டிசம்பர் 1922ஆம் ஆண்டு பிறந்தார். இவர் பொருளாதார நிபுணர் ஆவார். இந்திய பொருளாதாரத்தில் வரி சீர்திருத்தத் துறையில் முன்னோடியாக விளங்கியவர். இவரது தலைமையில் வரி சீர்திருத்த குழுவை இந்திய அரசு அமைத்தது. ஸ்பிக் ஆதரவுடன் சென்னையில் நிறுவப்பட்ட மெட்ராஸ் ஸ்கூல் ஆப் எகனாமிக்ஸ் நிறுவனத்தின் முதல் தலைவராவார்.

இவர் நெல்லை மாவட்டம் பாளையங் கோட்டையில் பிறந்தவர். தந்தை பெயர் சாமுவேல் தேவசிகாமணி செல்லையா. தாயார் பெயர் மாசிலாமணி. பாளையங்கோட்டை சேவியர் கல்லூரி, திருச்சி ஜோசப் கல்லூரியில் படித்த பின் அமெரிக்காவின் பிட்ஸ்பர்க் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டபடிப்பு முடித்தார்.

சென்னை கிருத்தவக் கல்லூரியில் 5 ஆண்டுகள் பொருளாதாரப் பேராசிரியர் பணி, பிறகு புதுதில்லியில் உள்ள நடைமுறைப் பொருளாதார ஆய்வுக்கான தேசிய கவுன்சிலில் மூத்த பொருளாதார நிபுணராகப் பணி, ராஜஸ்தான் பல்கலைக்கழகப் பொருளாதாரத் துறைத்தலைவர், நிதித் துறையில் கௌரவ ஆலோசகராகவும் பொதுநிதி மற்றும் கொள்கைக்கான தேசிய நிறுவனத்தையும் நிறுவினார். பொருளாதாரம், வரி, வருமானவரி, ஆகியவை குறித்து 13 புத்தகங்கள் எழுதியுள்ளார். இதே துறையில் 36 ஆய்வுக் கட்டுரைகளையும், 12 அறிக்கைகளையும் தயாரித்துள்ளார்.

இவரது சேவையைப் பாராட்டி இந்திய அரசு இவருக்கு பத்மபூஷண் விருது வழங்கி கௌரவித்தது.

# Entertainment Corner

## எக்ஸ்பிரஸ் ஜோக்ஸ்.........



கணவன் : காலெண்டர்ல என்ன மா பாக்குற?
மனைவி : பல்லி விழும் பலன்...
கணவன் : கொண்டா... நான் பாக்குறேன்... அது சரி... பல்லி எங்க விழுந்தது?
மனைவி : நீங்க சாப்ட்ட சாம்பார்ல...

******

மகள் : அம்மா அவரோட நேத்தைக்கு ரொம்ப சண்டைம்மா..
அம்மா : புருஷன் பொண்டாட்டிகுள்ள இதெல்லாம் சகஜம் தானே..
மகள் : அது சரி! இப்ப அந்த டெட்பாடியை என்ன பன்றது...?
அம்மா : என்ன டெட்பாடியா...?

******

### சென்ற வார இணைச் சொற்களுக்கான விடைகள்

**மறலி**

இமயன் நமன் எமன் கூற்றுவன்

### சென்ற வார குறுக்கெழுத்து புதிருக்கான விடைகள்

**மேலிருந்து கீழ் : 1. மரம் 2. சட்டை 3. ஒட்டகம் 6. பாகற்காய் 9. பசு**
**இடமிருந்து வலம் : 1. மஞ்சள் 4. பட்டம் 8. நாற்காலி**
**கீழிருந்து மேல் : 5. தம்பி 10. குதிரை 11. பல்லி**
**வலமிருந்து இடம் : 7. கழுதை 9. படகு**

### சென்ற வார சொல் விளையாட்டிற்கான விடைகள்

**1. ஔவை 2. ரவை 3. தம்பி 4. தரம் 5. வை 6. பித்தம் 7. ரத்தம் 8. பிரவை 9. தடம் 10. வைரம்**

### சென்ற வார விடுகதை விளையாட்டிற்கான விடைகள்

**1. பலாப்பழம் 2. தேங்காய் 3. மிளகாய் 4. பென்சில் 5. முட்டை**

உங்களின் திறமைகளை வெளிப்படுத்த, உங்கள் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை உங்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெயில் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.


| | |
|---|---|
| Publisher | : R. Rajesh |
| Editor | : Saranya Rajesh |
| Designer | : S. Aswini |
| Journalist | : P. Praveen |
| Marketing Executive | : C. Karthikeyan |

இது எங்களுடைய ஒரே பத்திரிக்கை நிறுவனம்
**This is our only concern**

**Express Velachery**
*Weekly - News Paper*
37F, Diya Complex
Velachery Main Road, Vijayanagar,
Velachery, Chennai - 600042.
*Timing: Monday to Friday 9.30 am to 6.00 pm*
*Saturday 9.30 am to 12.30 pm*
**044-42077328 / 7305837388**
E-mail : expressvelachery@gmail.com



**DISCLAIMER**

Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Express Velachery does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Express Velachery shall not be held responsible/ liable for any consequences, in case such claims are found to be false.


## சொல் விளையாட்டு

__________ __________
__________ __________
__________ __________
__________ __________
__________ __________

| | | |
|---|---|---|
| க | ணி | வு |
| ப | ளி | ண |
| இ | லை | து |

கட்டத்தில் உள்ள எழுத்துக்களில் 10 வார்த்தைகளை கண்டுபிடியுங்கள்.

**அறுசுவை சமையல்**

## வாழைப்பூ பக்கோடா

**தேவையான பொருள்கள்:**

வாழைப்பூ - 1
வெங்காயம் - 2
கடலைமாவு - 200 கிராம்
அரிசி மாவு - 50 கிராம்
கொத்தமல்லி, கறிபேப்பிலை - சிறிதளவு
இஞ்சி, பூண்டு பேஸ்ட் - 2 ஸ்பூன்
மிளகாய் தூள் - 2 ஸ்பூன்
பெருங்காயம் - சிறிதளவு
உப்பு - தேவையான அளவு
வெண்ணெய் - 1 ஸ்பூன்
எண்ணெய் - பொரிக்க தேவையான அளவு

**செய்முறை :**

❖ வாழைப்பூவை சுத்தம் செய்து ஆய்ந்து கழுவி வைத்துக் கொள்ளவும்.

❖ வெங்காயம், கொத்தமல்லி, கறிவேப்பிலையை பொடியாக நறுக்கி பின்னர் வாழைப் பூவை சிறிது எண்ணெய் விட்டு வதக்கி கொள்ளவும்.

❖ பின்னர் ஒரு பாத்திரத்தில் வதக்கிய வாழைப்பூவை போட்டு அதனுடன் கடலை மாவு, மிளகாய் தூள், வெங்காயம், கொத்தமல்லி, கறிவேப்பிலை, உப்பு, இஞ்சி பூண்டு பேஸ்ட், அரிசி மாவு, வெண்ணெய், பெருங்காயம் அனைத்தையும் போட்டு சிறிதளவு தண்ணீர் விட்டு பக்கோடா மாவு பதத்தில் பிசைந்து கொள்ளவும்.

❖ கடாயில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் மாவினைக் கிள்ளிப் போட்டு பக்கோடாக்களாக பொரித்து எடுத்தால் சுவையான வாழைப்பூ பக்கோடா ரெடி.

## விடுகதை விளையாட்டு

1. விழுந்தால் படுக்காது எழுந்தால் நிற்காது. - அது என்ன?
2. யாரும் ஏற முடியாத மரம். கிளைகள் இல்லாத மரம். - அது என்ன?
3. கோணலாக இருந்தாலும் குணமும் சுவையும் குன்றாது. - அது என்ன?
4. விட்டம் போட்டு வீடு கட்டியும் விசிறி மாட்ட இடம் இல்லை. - அது என்ன?
5. பொட்டுப் போல் இலை இருக்கும் குச்சிபோல காய் காய்க்கும். - அது என்ன?

### அறிவியல் தகவல்

**ஹைட்ரஜன் ஆலையாக மாறும் அணு உலை**

❖ அணு ஆற்றலை வைத்து ஹைட்ரஜனை தயாரித்து, அதை மின் உற்பத்திக்கான எரி பொருளாக்குவது கட்டுபடியாகுமா? அணு மின் நிலையங்களை ஹைட்ரஜன் தயாரிப்பு நிலையங்களாகவும் மாற்றலாமா? இந்தக் கேள்விகளுக்கு விடை காணத் துடிக்கிறது அமெரிக்க எரிசக்தித் துறை.

❖ இதற்கென அண்மையில், ஒரு சோதனைத் திட்டத்திற்கு ரூ.150 கோடி ரூபாய் நிதியை அளித்துள்ளது அமெரிக்க எரிசக்தித்துறை. அமெரிக்காவின் பீனிக்ஸ் நகரிலுள்ள பாலோ வெர்டே அணு உற்பத்தி நிலையத்தில், சோதனை ஹைட்ரஜன் ஆலையை ஒரு தனியார் நிறுவனம் அமைக்கவுள்ளது. அணு ஆற்றல் மூலம் ஹைட்ரஜனைத் தயாரித்தால் அதை, "பசுமை" ஹைட்ரஜன் என்றே அழைப்பர். ஏனெனில், அணு ஆலையில் புகை வெளிப்படாது என்பதுதான். ஆனால், விபத்து நேர்ந்தால் ஏற்படும் கதிர் வீச்சு பற்றி இந்த இடத்தில் யாரும் கண்டு கொள்வதில்லை.

❖ வரும் ஆண்டுகளில் சூரிய மின்னாற்றலுக்கே மவுசு அதிகரிக்கும். ஆனால், சூரிய வெளிச்சமும், வெப்பமும் குறைவாக இருக்கும் மாதங்களில் அணு மற்றும் இதர மின் உற்பத்தி முறைகளுக்கு தேவை இருக்கும். எனவே, வெயில் காலங்களில், அணு மின் நிலையங்கள், நீரிலிருந்து ஹைட்ரஜனை பிரித்து, திரவ ஹைட்ரஜனை உற்பத்தி செய்யும் நிலையங்களாக மாற்றலாம் என, விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

❖ அதே வேளையில அணு மின் நிலையங்கள், இரண்டாம் கட்ட வருவாய் ஈட்டுவதற்கு ஹைட்ரஜனைத் தயாரிக்கலாம். அல்லது, அணு மின்நிலைய தேவைக்கு ஹைட்ரஜனை திரவ மின் கலனாகவும் பயன்படுத்தலாம். பரிசோதனை வெற்றி பெற்றால் தான் இது சரிப்படுமா என்பது தெரியும்.

## விவசாயம் காப்போம்

### மொட்டை மாடியில் பரங்கி சாகுபடி

மொட்டைமாடியில் எந்தப் புறத்தில் நல்ல சூரிய ஒளி கிடைக்கும் என்பதை தெரிந்துக் கொண்டு பூமியில் அரை அடி குழி வெட்டி, நன்கு ஆறவைத்து, மக்கிய தொழு உரம் 10 கிலோ வைக்க வேண்டும்.

விதைப்பதற்கு 30 நாட்களுக்கு முன் ஒரு கிலோ மக்கிய தொழு உரத்தில் சூடோமோனாஸ் 20 கிராம், அசோஸ்பைரில்லம் 50 கிராம், பாஸ்போ பாக்டீரியா 50 கிராம் இவைகளைக் கலந்து நிழலில் நீர் தெளித்து (குழியில்) உடனே வைக்க வேண்டும்.

குழியில் சாணிப்பாலில் ஊற வைத்த மூன்று விதைகளை நடவு செய்ய வேண்டும். ஆடு, மாடு, கோழி, எலி இவைகள் போகாமல் இருக்க குழியை சுற்றி தடுப்பு வேலி அமைக்க வேண்டும்.

பத்து நாட்கள் கழித்து குழியில் முளைத்துள்ள மூன்று செடிகளில் நல்ல திடமான செடி ஒன்றை தேர்ந்தெடுத்து மற்றவைகளை அகற்ற வேண்டும்.

செடிகள் கொடிவிட்டு வளர்ந்ததும் கொடியை விட்டு அரை அடி தள்ளி கணு உள்ள மூங்கிலை நட்டு கொடி மூங்கிலில் ஏற்ற வேண்டும்.

இந்தக் கொடியை மொட்டை மாடிக்கு கொண்டு செல்ல முயற்சி செய்து பின் கொடி கீழே சாயாமல் இருக்க ஒரு முறை கொடியை கயிற்றில் பூநார் கொண்டு கட்ட வேண்டும். இதனால் கொடி கீழே வளைந்து விடாமல் நிமிர்ந்து நிற்கும். கொடிகளில் எந்த பக்கத்துளிரும் இல்லாமல் மாடியை எட்டி விடும்.

மாடியை எட்டியவுடன் செடி பரவலாக மொட்டைமாடியில் பரவும் ஏற்கனவே தேர்ந்தெடுத்த சூரிய ஒளி படும் இடத்தில் செடி செழிப்பாக பரவத் தொடங்கும்.

மாடியில் பரவும் இந்த செடி ஒரு விதையில் பிறந்து வளர்ந்து பின் இந்த செடி ஜூலை மாதம் விதைக்கப்பட்டு அக்டோபர் மாதம் பூக்கள் பூக்கும். பின் ஜனவரி மாதம் பரங்கி பிஞ்சுகள் விட்டு அறுவடைக்கு வரும்.

செடியின் வேர் பூமியில் இருக்கும். காய்கள் மொட்டைமாடி மேல் காய்க்கும். இதனால் ஆடு மாடுகள் போன்றவைகளால் பாதிக்கப்படாது. காய்த்த காய்கள் மொட்டை மாடியில் அப்படியே இருந்து முதிர்ச்சியடையும்.

கிராமத்தில் வெற்றிகரமாக சாகுபடி செய்த பரங்கி காயை நகரத்தில் உள்ளவர்களும் சாகுபடி செய்யலாம்.
















Owned & Published R.Rajesh, No.17, 100ft, By Pass Road, Velachery, Ch-42. Printed by S.Ali Mohammed Sayeed, Mo.22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Ch-14. Editor: SARANYA RAJESH